ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

23.04.2026

1. ஞானிகள் படை கொண்ட ஆறுமுகா
ஞானபண்டிதா உமை போற்றி
இனிமைபட பராபவ தகர் திங்கள்
ஈராம் குருவார அருளாசியாக

2. ஆகவே ஆறுமுக அரங்கன் யானும்
அருளுவேன் உலகோர் நலம் பெற
மகான்கள் ஒன்று கூடி அருளும்
மாதரும சாலை பிரணவக் குடில் தன்னில்

3. தன்னிலே அரங்கனும் சோதி வடிவில்
தக்கபடி அருள்புரிந்து வர
அண்ணலே என எமை சரணடைந்து
அனைவரும் வேண்டி வர

4. வருகவே அரங்கன் என்னுடன்
வடிவேலும் ஞானிகள் பலரும்
பெருமைபட ஆசி பல தந்தும்
பெலமும் ஆயுள் திடமும் அருள்வர்

5. அருளவே அரங்கன் என்
ஆற்றல்மிக்க தொண்டர்கள்
தருமபலத்தால் உலகில் மாற்றம்
தரும ஞான ஆட்சிக் காலமாக

6. ஆகவே மாற்றம் காணும்
அப்பனே என என் தருமத்தில்
மிகைபட பொருளுதவி செய்து
மேலான வேண்டல் வைக்க

7. வைக்கவே வேண்டும் யாவும்
வரமாகத் தந்தருளப்படும்
ஊக்கமுடன் சன்மார்க்க வழி
உயிர்க்கொலை நீக்கி வருகின்ற

8. வருகின்ற மக்கள் எல்லாம்
வல்லமை மிக்க ஞானிகளின்
ஆறுதலும் ஆசி அனுகூலமும்
அடைந்து சிறப்பர் என்பேன்

9. என்கவே குருவார பூசை
இணையில்லா முழுமதி பூசை
நன்மைதர பிரணவக்குடிலில் நடக்க
நாடிவந்து கலியுக மக்கள்

10. மக்களெல்லாம் உறுதி கொண்டு
மாதரும வழி தொண்டு செய்து
பக்குவமும் பரோபகார நிலை தா
பாதுகாத்து எங்களுடன் வா என வேண்ட

11. வேண்டவே அவரவர் தனக்கும்
வினை வென்று பிறவி அறுத்து
உண்டாக்குவோம் ஞானவான் நிலை
உரைத்திட்ட அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி